## ஒன்றிய அரசின் பட்ஜெட்: கோவை, மதுரை மெட்ரோ ரயில், கல்வி நிதி உள்ளிட்ட எந்த அறிவிப்பும் இல்லை!

# தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கிறது மோடி அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் கோரிக்கைகள் எதுவும் பரிசீலிக்கப்படவே இல்லை!

**சென்னை, பிப்.2-**

**ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை, கல்வி நிதி உள்ளிட்ட எந்தத் திட்டங்களையும் அறிவிக்காமல் தமிழ்நாட்டை மோடி அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. மேலும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வைத்த கோரிக்கைகள் எதுவும் பரிசீலிக்கப்படவே இல்லை.**

**இதுகுறித்த விவரம் வருமாறு:-**

மக்களவையில், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த நிலையில், மதுரை, கோவை மெட்ரோ ரயில் உள்பட தமிழ்நாட்டுக்கு எதிர்பார்க்கப்பட்ட திட்டங்கள் அறிவிக்கப்படாதது ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்றிய நிதி நிலை அறிக்கையில், நிறுத்தி வைக்கப்பட்ட தமிழ்நாட்டுக்கான கல்வி நிதி ரூ.3 ஆயிரத்து 548 கோடி விடுவிப்பு, மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அனுமதி, ஒன்றிய அரசின் வரி வருவாயில் மாநிலங்களுக்கு ரூ.50 சதவீத நிதிப் பகிர்வு, ஜல் ஜீவன் திட்டத்துக்கான நிதி ரூ.3 ஆயிரத்து 112 கோடி விடுவிப்பு உள்ளிட்ட அறிவிப்புகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நிறுத்தி வைக்கப்பட்ட தமிழ்நாட்டுக்கான கல்வி நிதி குறித்த அறிவிப்பு பட்ஜெட்டில் இடம்பெறவில்லை.



இதேபோல, தமிழ்நாட்டுக்கு எந்த புதிய ரயில்வே திட்டமும் அறிவிக்கப்படவில்லை. கோவை, மதுரை நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கான அறிவிப்பும் இடம்பெறவில்லை. மேலும், சென்னை மெட்ரோ 2ம் கட்ட திட்டத்திற்கு நிதி அறிவிக்கப்படவில்லை. தேர்தலை மனதில் வைத்தாவது தமிழ்நாட்டுக்கு திட்டங்கள் அறிவிக்கப்படுமா என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், தமிழ்நாட்டுக்கு புதிய அறிவிப்புகள் இல்லாதது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளதையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**Union Budget 2026: வழக்கமாகச் சொல்லும் திருக்குறளோடு சேர்த்து, தேர்தலை மனதில் வைத்தேனும் தமிழ்நாட்டுக்கான பின்வரும் அறிவிப்புகள் இடம்பெறுமா?**

- **விடுவிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாணவர்களின் படிப்புக்கான 3,548 கோடி ரூபாய் கல்வி நிதி**
- **கோவை, மதுரை மெட்ரோ இரயில்,**
- **தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுத்தி வரும் ஜல் ஜீவன் திட்டத்துக்கான 3,112 கோடி ரூபாய் நிதி,**
- **புதிய இரயில்வே திட்டங்கள்,**
- **நிதி ஆணையம் பரிந்துரைத்தபடி ஒன்றிய அரசின் வரி வருவாயில் மாநிலங்களுக்கு 50% நிதிப் பகிர்வு.**

**இன்னும் பட்டியல் இருக்கிறது. தேர்தலை மனதில் வைத்தாவது இம்முறை தமிழ்நாட்டுக்கான அறிவிப்புகளைத் தவறாமல் வெளியிடுவீர்கள் என எதிர்பார்க்கிறோம். அவை மதுரை எய்ம்ஸ் போல அறிவிப்போடு நின்றுபோகாமல், முறையான நிதி ஒதுக்கீட்டுடன் குறித்த காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கோருகிறோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### விடுதலைப் போராட்டத்தில் முழு மூச்சாக ஈடுபட்ட

## ஐயா ஓமந்தூர் ராமசாமி தலைசிறந்த காந்தியவாதி!

### பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, பிப். 2-**

**“விடுதலைப் போராட்டத்தில் முழு மூச்சாக ஈடுபட்ட ஐயா ஓமந்தூர் ராமசாமி அவர்கள் தலைசிறந்த காந்தியவாதி” என்று அவரது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில் புகழாரம் சூட்டியுள்ளார்.**



விடுதலைப் போராட்ட வீரரும் முன்னாள் முதலமைச்சருமான ஓமந்தூராருக்குத் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

எளிமையின் உருவம் - விடுதலைப் போராட்ட வீரர் - முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூராருக்குத் திருவுருவச் சிலை, உப்புச் சத்தியாகிரகம், சட்டமறுப்பு இயக்கம், தனிநபர் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு என இந்திய விடுதலைப் போராட்டத்தில் முழு மூச்சாக ஈடுபட்ட தலைசிறந்த காந்தியவாதியும், இந்தியா விடுதலையடைந்தபோது நம் மாநில முதலமைச்சராக இருந்த பெருமைக்குரியவருமான ஓமந்தூர் ராமசாமி ஐயா அவர்களின் பிறந்தநாள்.

சமூகநீதிச் சாதனையாளராகத் தந்தை பெரியாராலும் பேரறிஞர் அண்ணாவா லும் போற்றப்பட்ட அவருக்குச் சென்னை ஓமந்தூரார் மருத்துவக் கல்வி வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என அறிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## ஒன்றிய அரசின் 2026 - 2027ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை!

### நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்!

**புதுடெல்லி, பிப். 2-**

**2026-27ம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் நேற்று தாக்கல் செய்தார்.**



வேலைவாய்ப்பை உருவாக்கவும், இறக்குமதியை குறைக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் கூறினார்.

மேலும் அவர் நாட்டின் பொருளாதாரம் சீரான வேகத்தில் முன்னேறி வருவதாகவும் தெரிவித்த அவர், உயிரி மருத்துகள் உற்பத்தி திட்டத்திற்கு அடுத்த 5 ஆண்டுகளில் 10ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் கூறினார். மின்னணு தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ரூ. 40ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்படும் செமி கண்டக்டர் உற்பத்தி திட்டம் 2.0 செயல்படுத்தப்படும் ஒடிசா, கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் அரிய வகை கனிமங்கள் உற்பத்தி வழித்தடம் அமைக்கப்படும்.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில், நாட்டில் நீர்வழிப்பாதை போக்குவரத்து மேம்படுத்த 20 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். சரக்கு பயன்பாட்டிற்கு தேசிய நீர்வழிப்பாதைகள் 5 ஆண்டுகளில் அமைக்கப்படும் என்று கூறினார். உத்தரகாண்ட், இமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீரில் மலை ரயில் சேவை மேம்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார். நாடு முழுவதும் 7 அதிவேக புதிய ரயில் வழித்தடங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார். சென்னை பெங்களூரு மற்றும் சென்னை ஐதராபாத்துக்கு அதிவேக ரயில்பாதை அமைக்கப்படும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புற்றுநோய் சிகிச்சைக்கு பயன்படுத்தும் 17 மருந்துகளுக்கு சுங்க வரி நீக்கப்பட்டுள்ளது. அரிய வகை நோய்களுக்கான மருந்துகளின் இறக்குமதிக்குமான வரிகளும் நீக்கம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார வாகனங்களை ஊக்குவிக்கும் வகையில் லித்தியம் பேட்டரி தயாரிக்க பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு இறக்குமதி வரி இல்லை. ஆழ்கடல், பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் பிடிக்கப்படும் மீன்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள டேட்டா மையங்களுக்கு 2047 ஆம் ஆண்டு வரை வரி கிடையாது. பங்குகளை திருப்பி வாங்கும் நிறுவனங்களுக்கு மூலதன ஆதாய வரி விதிக்கப்படும். வெளிநாடு வாழ் இந்தியர்கள் சொத்துக்களை விற்கும்போது செலுத்த வேண்டிய வருமான வரி குறைக்கப்பட்டுள் ளது. உள்நாட்டில் பயிற்சி விமானங்களை உற்பத்தி செய்ய பயன்படுத்தும் மூலப் பொருட்களுக்கு சுங்க வரி நீக்கப்பட்டுள்ளது. கடல்சார்ந்த ஏற்றுமதி பொருட்களை உற்பத்தி செய்ய இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களுக்கு வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது. காலணிகள் ஏற்றுமதி செய்வோருக்கு மூலப் பொருட்களை வரி இல்லாமல் இறக்குமதி செய்ய சலுகை வழங்கப்படும் என்றும் ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

#### ஆதிச்சநல்லூர்

தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர் உள்பட நாடு முழுவதும் 15 தொல்லியல் தலங்கள் கலாச்சார மையங்களாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் தெரிவித்தார். பொதிகை மலையில் மலையேற்ற சுற்றுலாவை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சென்னை பழவேற்காடு ஏரியில் பறவைகள் காட்சி மையம் அமைக்கப்படும் என்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

#### பங்குச் சந்தை வீழ்ச்சி

நிதி அறிக்கை தாங்கல் செய்த நிலையில் நேற்று மும்பை பங்குச் சந்தை குறியீட்டெண் சென்செக்ஸ் 2 ஆயிரத்திற்கும் மேல் சரிந்தது. தேசிய பங்குச் சந்தை நிஃப்டியும் 700 புள்ளிகளுக்கு மேல் சரிந்தது. அனைத்து துறை சார்ந்த நிறுவனங்களிலும் வாங்கிய பங்குகளை முதலீட்டாளர்கள் விற்பனை செய்து வருவதால், இந்திய பங்குச் சந்தைகள் கடும் சரிவை சந்தித்துள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## சென்னையில் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூ.50 உயர்வு!

*சென்னை, பிப்.2-*

*சென்னையில் வணிக பயன்பாட்டுக்கான 19 கிலோ சிலிண்டர் விலை ரூ.50 உயர்ந்து ரூ1,899.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. வீட்டு பயன்பாட்டிற்கான 14.2 கிலோ சிலிண்டர் விலை மாற்றம் இன்றி ரூ.868.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. பாரத், இந்துஸ்தான், இந்தியன் ஆயில் ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிக பயன்பாட்டுக்கு 19 கிலோ எடையிலும், சமையல் கேஸ் சிலிண்டர்களை நாடு முழுவதும் வினியோகம் செய்து வருகின்றன.*

*இந்நிலையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டரின் விலை ரூ.50 உயர்ந்து ரூ.1899.50 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு பயன்பாட்டிற்கான சிலிண்டரின் விலையில் மாற்றம் இல்லாமல் ரூ. 868.50 காசுகள் என்ற நிலையில் நீடிக்கிறது. வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ந்து உயர்ந்து வருவது வணிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (01.02.2026) கோயம்புத்தூர் மாவட்டம், தென்சேரிமலை, அருள்மிகு மந்திரகிரி வேலாயுத சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.13 கோடி செலவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தங்கத் தேரினை ஒப்படைக்கும் நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஶ்ரீதர், தளபதி முருகேசன், மண்டல இணை ஆணையர் பி.இரமேஷ், உதவி ஆணையர் திருமதி உஷா நந்தினி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## ஒடிசாவில் லஞ்சம்பெற்ற சி.பி.ஐ. அதிகாரி கைது!

*புவனேஷ்வர், பிப். 2-*

*ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள நிலக்கரி சுரங்கங்களின் கண்காணிப்புப் பணியில் துணை சப்இன்ஸ்பெக்டர் பிரசாந்த குமார் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். இவர், சி.பி.ஐ.யால் குற்றம் சாட்டப்பட்ட மற்றொரு நபரைப் பாதுகாப்பதற்காக பிரசாந்தகுமார் லஞ்சம் வாங்கியதாக புகார் எழுந்தது. நிலக்கரி ஏற்றிச் செல்லும் நிறுவனங்களின் முறைகேடுகளுக்கு உடந்தையாக இருந்து அந்த அதிகாரிகள் லஞ்சம் பெற்றதாக கூறப்படுகிறது. இந்நிலையில், இதுகுறித்து வழக்கு பதிவு செய்துள்ள சி.பி.ஐ., பிரசாந்த குமாரை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறது. மேலும், இந்த வழக்கில் மகாநதி கோல் ஃபீல்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் பணியாற்றி வந்த சாரதா பிரசாத் சேத்தி என்ற அதிகாரியையும் சி.பி.ஐ. கைது செய்துள்ளது.*



பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், நேற்று (01.02.2026) மெரினா நீலக்கொடி கடற்கரையில் நடைபெற்ற மெரினாவில் கலைவிழா நிகழ்ச்சியில் ரஷியா நாட்டின் கலைஞர்கள் பங்கேற்ற ரஷியா நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சி மற்றும் தமிழ்நாடு கிராமிய கலைஞர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில், மேயர் திருமதி ஆர். பிரியா பங்கேற்று, சென்னையில் உள்ள ரஷிய அறிவியல் மற்றும் கலாச்சார மையத்தின் இயக்குநர் அலெக்சாண்டர் டோடோநௌ, கலைக்குழுவின் தலைவர் திருமதி எலினா மற்றும் ரஷியா நாட்டின் கலைஞர்கள் மற்றும் தமிழ்நாடு கிராமிய கலைஞர்களைப் பாராட்டினார்.